SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

# சுருக்கம்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 25 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் தகுதி வாய்ந்த 4308 பணியாளர்களுக்கு 2022–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்(பாஉ.2)துறை**

அரசாணை (டி) எண்: 18

நாள்: 12.01.2022
ஸ்ரீ பிலவ, மார்கழி–28
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது:

1 அரசாணை (டி) எண்.11, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள(பா.உ.2)த்துறை, நாள்.12.01.2021.

2 பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர் கடித ந.க.எண்.19497/என்.3/2021, நாள்.15.12.2021.

------

<u>ஆணை</u>:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 25 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் மொத்தம் 3877 பணியாளர்களுக்கு 2021–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கிட ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 25 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் மொத்தம் 4308 பணியாளர்களுக்கு 2022–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகையினை கீழ்க்காணும் வகையில் வழங்கிட ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்:

| பணியாளர்கள் பணிபுரிந்த நாட்கள் | அனுமதிக்கப்படவுள்ள ஊக்கத்தொகை |
|---|---|
| 200 நாட்கள் அதற்கு மேல் | ரூ.1000/– |
| 151 நாட்கள் முதல் 200 நாட்கள் வரை | ரூ.400/– |
| 91 நாட்கள் முதல் 150 நாட்கள் வரை | ரூ.240/– |
| 90 மற்றும் அதற்கு குறைவான நாட்கள் | ரூ.145/– |

3. பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை இயக்குநர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாடு பால்

(த.பி.பா)

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 25 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் தகுதி வாய்ந்த 4308 பணியாளர்களுக்கு 2022-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையினை பின்வருமாறு வழங்கிட அரசு ஆணையிடுகிறது:

| பணிபுரிந்த நாட்கள் | 2022-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு தற்போது அனுமதிக்கப்பட்ட ஊக்கத்தொகை |
|---|---|
| 200 நாட்கள் அதற்கு மேல் | ரூ.1000/- |
| 151 நாட்கள் முதல் 200 நாட்கள் வரை | ரூ.400/- |
| 91 நாட்கள் முதல் 150 நாட்கள் வரை | ரூ.240/- |
| 90 மற்றும் அதற்கு குறைவான நாட்கள் | ரூ.145/- |

4. மேற்கூறிய ஊக்கத் தொகையினை வழங்குவதால் ஏற்படும் செலவினத்தை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 25 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களே ஏற்றுக்கொள்ளும்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.59818/நிதி(கா.ப,பா(ம)மீ) துறை/2021, நாள்:05.01.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ.சு.ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, சென்னை-51.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை-35
வழியாக:- ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, சென்னை-51.

<u>நகல் :</u>

நிதித் (காப,பாவ (ம)மீவ)துறை, சென்னை-09.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-09.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனித வள மேலாண்மை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-09.
மாண்புமிகு அமைச்சர் (பால்வளத்துறை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-09.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனி செயலாளர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு /உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(மு.சந்திரா) 12.1.2022
பிரிவு அலுவலர்.